சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **215 / 2022**

பெயர்: கீதா வா.சா.1 தேதி **07.03.2026**

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைத் தொடர்ச்சி

1. செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்தாக கூறக்கூடிய தங்கம்மாள் என்பவர் எனது அம்மாவின் அம்மா. மேற்படி தங்கம்மாளுக்கு எனது அம்மா பழனியம்மாள், பிரதிவாதி மாணிக்கம், முருகன் பழனியாண்டி ஆகியோர்கள் வாரிசுதாரர்கள். எனது அம்மாவின் அப்பா பெயர் குழந்தைவேல். மேற்படி தங்கம்மாள் வேலை எதுக்கு செல்லவில்லை என்று சொன்னால் கூலி வேலை செய்துவந்தார். குழந்தைவேலுக்கு மது பழக்கம் உண்டா என்றால் தெரியாது. மேற்படி தங்கம்மாள் பெயரில் இருந்த 1 1/2 ஏக்கர் பூமி ஒரே தாக்காக இருந்தது. மேற்படி பூமி தங்கம்மாள் பெயரில் ஒரே கிரையம் தான். அதன் சர்வே 105/A. மேற்படி பூமியை தங்கம்மாளின் ஆண் வாரிசுகள் அனைவரும் சேர்ந்து தான் கிரையம் பெற்றார்கள் என்றால் சரியல்ல. மேற்படி குழந்தைவேல் மது பழக்கத்திற்கு அடிமையானதாலும், குடும்பத்தை சரிவர பராமரிக்காததாலும் ஆண் வாரிசுகள் அனைவரும் சேர்ந்து தங்கம்மாள் பெயரில் கிரையம் பெற்றார்கள் என்றால் சரியல்ல. மேற்படி தங்கம்மாளுக்கு மேற்படி சொத்தானது தனிப்பட்ட முறையில் பாத்தியப்படவில்லை என்பதால் மேற்படி சொத்தை தங்கம்மாள் உரிமை மாற்றம் செய்வதற்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

2. மேற்படி 1 ஏக்கர் 40 செண்டில் நானும், பிரதிவாதிகளும் உளுந்து விதைத்துள்ளோம். மேற்படி 1 ஏக்கர் நிலத்தில் நாங்கள் 35 செண்டில் உளுந்து பயிரிட்டுள்ளோம், 40 செண்டில் உள்ள 20 செண்டில் உளுந்து பயிரிட்டுள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி 40 செண்ட் பூமியில் எவ்வித பிரச்சனையும் இல்லை. நான் எனது மாமா முருகன் மகனை திருமணம் செய்துள்ளேன். மேற்படி பழனியாண்டி அவரது மனைவியை ஊர் அறிய திருமணம் செய்யாமல் ஒரு பெண்ணை அழைத்து வந்து குடும்பம் நடத்தாமல் வாழ்ந்து வாரிசு இல்லாமல் இறந்துபோய்விட்டார் என்றால் சரிதான். மேற்படி தங்கம்மாளின் ஆண் வாரிசுகளுக்கு தங்கம்மாள் உயிருடன் இருந்த காலகட்டத்திலேயே வாய்மொழியாக மூன்று சம பாகங்களாக சொத்தை பிரித்து கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. மேற்படி பழனியாண்டிக்கு வாய்மொழியாக பிரிந்ததாக கூறக்கூடிய சொத்தை அவர் பிரதிவாதி மாணிக்கத்திற்கு பதிவு செய்த கிரையம் மூலம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. மேற்படி கிரையம் தகுந்த மறுபயனுக்கானது என்றால் சரியல்ல. மேற்படி பதிவு செய்த கிரைய பத்திரத்திலேயே தங்கம்மாள் கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரியல்ல.

3. மேற்படி பிரதிவாதிக்கு கிரைய வகையில் 33 1/2 செண்டும் வாய்மொழியாக 33 செண்ட்டும் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எனது கணவரின் தகப்பனார் முருகனுக்கு 33 1/2 செண்ட் மட்டுமே பாத்தியம் என்றால் சரியல்ல. மேற்படி தங்கம்மாள் எழுதிக்கொடுத்தாக கூறக்கூடிய தான செட்டில்மெண்ட் ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி மாணிக்கம் என்பவர் வாய்மொழி பாகத்தின் மூலமாகவும், கிரைய ஆவணத்தின் மூலம் கிடைக்கபெற்ற சொத்தினை பிரதிவாதி அனுபவம் செய்துவருவதை அபகரிக்கவேண்டும் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டுள்ளபடி நான் ஆவணங்கள் எதனைவும் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. பொய்யான சங்கதிகளை தெரிவித்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளபடி வழக்கானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.07 15:56:24 +0530

சார்பு நீதிபதி
குளித்தலை.